பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 25 புதன்கிழமை 12.10.2022 கதிர் 339

### இனி இது ரகசியம் அல்ல!

நோர்வேயின் முன்னாள் அனுசரணைப் பணியாளர் எரிக்சொல்ஹெய்மின் இலங்கை வருகையை ஒட்டி நான் நேற்று கோடிகாட்டிய விடயம்-கொளுத்திப் போட்ட சீறு வாணம் - பரபரப்புச் செய்தியானமை உண்மை.

அவர் ஜனாதிபதி ரணில் ☞2



# திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமித்த கடைகள் பக்கத்தில் மாற்றிடத்திலாம்!

## அமைச்சர்கள் டக்ளஸ் – விதுர நேற்று நேரில் பார்த்து முடிவு

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள வியாபார நிலையங்களை பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவதற்கு கலாசார மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வியாபார நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை அமைச்சர்கள் இருவரும் பார்வையிட்ட நிலையில், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கு ☞12

# வலி. வடக்கு ஆகிரமிப்புக் காணிகளை முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை


## கொழும்பிலிருந்து வந்தது உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்ப்பாணம் வலி வடக்கில் இராணுவத்தினர் வசம் உள்ள மக்களிற்குச் சொந்தமான நிலங்களை முழுமையாக சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளர் எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வலி வடக்குப் பகுதியில் தற்போதும் 2 ஆயிரத்து 467 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. இதில் இராணுவத்திற்கு ஆயிரத்து 614 ஏக்கரையும் அளவீடு செய்யுமாறு 2022.09.23 காணி அமைச்சின் மேலதிக செயலாளர் ரேணுகாவினால் தெல்லிப்பளை பிரதேச செயலாளருக்கு கடிதம் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ☞12



MINISTRY OF TOURISM & LANDS

# கோப்பாய், கல்வியங்காட்டில் போதைவஸ்துடன்2 பேர் கைது

நீண்ட காலமாக யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் நீண்ட காலமாக பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய கோப்பாய் செல்வபுரத்தைச் சேர்ந்த குறித்த நபர் நீண்ட காலமாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் 5 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். ☞12

# பெண் உட்பட 3 பேர் வடமராட்சியில் கைது

ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களுடன் பெண் உட்பட மூவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 20 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். ☞12

# மாணவியைக் கெடுக்க முயற்சி மட்டக்களப்பில் அதிபர் கைது

மட்டக்களப்பு நகர் பகுதியில் 19 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த பாடசாலை அதிபர் ஒருவரை நேற்று முன்தினம் தாம் கைது செய்துள்ளனர் என மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கா.பொ.த உயர் தரத்தில் கற்றுவரும் மாணவி ஒருவர் பாடசாலை ஒன்றில் விடுதியில் இருந்து கொண்டு வேறு ஒரு பாடசாலையில் கல்வி கற்றுவருகின்றார். ☞2

# ஐ.நாவுக்குக் கணக்கு காட்ட ஆணைக்குழு மட்டு. விஜயம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பகிஷ்கரிக்க அழைப்பு

கொழும்பு,ஒக்.12

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களைச் சந்திக்கும் திட்டம் ஒன்றுடன் இனவழிப்பு அரசின் ஆணைக்குழுக்கள் எதிர்வரும் 21ஆம் திகதி கிழக்கு மாகாணமான மட்டக்களப்பிற்கு செல்லவிருப்பதன் நோக்கம் சாவதேச சமூகத்திற்கு மீண்டும் ஒருமுறை கணக்கு காட்டி ஏமாற்றுவதற்கான மற்றொரு முயற்சி என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதனை அம்பலப் படுத்தும் வகையில் ஈழத்தமிழ் ☞12

# முக்கிய குற்றச்சாட்டில் இருந்து அர்ஜூன மகேந்திரன் விடுவிப்பு!



2015 ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி குறித்து தாக்கல் செய்யப்பட்ட பிணை முறி மோசடி வழக்கின் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் மற்றும் 9 பிரதிவாதிகளை விடுதலை ☞12

# இந்தியா செல்லவிருந்த 11 பேர் மன்னாரில் கைது

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவில் 8 ஆம் பிரிவு பிரதேசத்திலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு செல்வதற்கு தயாராகவிருந்த - கிளிநொச்சியைச் சேர்ந்த - இரண்டு பெண்களின் இரண்டு குழந்தைகள் உட்பட 11 பேர் ☞2



# யாழ்ப்பாணத்தில் காணி வாடிவீட்டுக்கு வழங்கல்!

யாழ்ப்பாணத்தில் வாடிவீட்டை அபிவிருத்தி செய்ய நகர மயமாக்கல் அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தான் இப்போது கொழும்பு வந்துள்ளார். நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுடன் பேச்சு நடத்தியவர், நாளை புறப்ப டுகின்றார்.

இன்று மாலை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பேச்சாளர் எம் ஏ சுமந்திரன் எம்.பி. மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகிய இருவரையும் அவர் சந்தித்து பேசுகின்றார் என்று தெரிகிறது.

சுமந்திரனுக்கும் சொல்ஹெய்முக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுவல்ல.

கடந்த தடவைக்கு முதல் தடவை சுமந் திரன் ஜேர்மனி உட்பட மேற்கு நாடுகள் நான்குக்குக் குறுகிய காலப் பயணம் ஒன்றை மேற்கொண்டு விட்டு நாடு திரும்பி இருந்தார் அல்லவா? அப்போது நோர்வே யில் சுமார் பத்து மணி நேர நிகழ்ச்சி நிரல் சுமந்திரனுக்கு இருந்ததாக அறிந்தேன். அவ்வளவு குறுகிய நேர நோர்வே விசிட் அது.

சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரு நகரத்திலிருந்து சுமந்திரன் தங்கி இருந்த இடத்திற்கு சொல்ஹெய்ம் காரில் பயணம் செய்து, சுமந்திரனைத் தேடி வந்து, சந்தித்துச் சென்றார் என்றார் என் நோர்வே தகவலாளர் ஒருவர்.

அதன் பின்னர் நடைபெறும் இரண்டா வது சந்திப்பு இன்று என எண்ணுகிறேன்.

இந்தச் சந்திப்புகள், இவற்றின் பின் புலத்தில் கட்டவிழும் விடயங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிற தலைவர் களுக்கோ, எம்.பிக்களுக்கோ தெரிய வில்லை. சம்பந்தனுக்குக் கூடத் தெரியுமோ யான் அறியேன்.

சுமந்திரன் - சாணக்கியன் இணை என்ற இருவர் மட்டத்தில் கட்டவிழும் இந்த விடயங்களின் பின்புலம் இன்னமும் அம்பலமாகவில்லை. கூட்டமைப்பின் சார் பில் என்று இல்லாமல் தனிப்பட்ட விடயங் களாக இவற்றை சுமந்திரன் - சாணக்கி யன் இணை கையாளக் கூடும்.

இது தமிழர் தேசிய இனப்பிரச்சினை யுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் என்று நமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்ற செய்திகள் உண்மையாயின், இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று - விவகாரத்தின் ஆரம்பமே மூடு மந்திரம் எனின், அதன் பெறுபேறு பொது நிலையில் சறுக்கலுக்கு உள்ளாகி விடும்.

அடுத்தது - எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேத் தரப்புத் தொடர்பாக புலிகளின தும் தமிழ் மக்களினதும் முன்னைய பட்டறிவு அனுபவத்தை மறந்து, விடயத் தைக் கையாண்டால், மீண்டும் ஒரு தடவை 'டக்' அடிக்க நேர்ந்து விடலாம்.

எரிக் சொல்ஹெய்ம் தரப்பின் பங்களிப்பு தொடர்பில் இன்றைய காலைக்கதிரின் ஆசிரியர் தலையங்கமும் கையாண் டுள்ளது.

அவர் 2002 - 2006 காலப்பகுதியில் இலங்கை விடயத்தை கையாண்ட போது அரசியல் களத்தில் சுமந்திரனும் இல்லை, சாணக்கியனும் இல்லை. நோர்வே பற்றி எழுந்தமான கருத்தோட்டமே அவர்களுக்கு இப்போது புரிதலாக இருக்க கூடும்.

விடுதலைப் புலிகளுக்கு நேர்ந்த அனு பவத்தின் பின்புலத்தோடு விடயங்களைக் கையாளுங்கள் - அல்லது நோர்வேயுடன் ஊடாடுங்கள் - என்ற சின்ன 'அட்வைஸை' சுமந்திரன் - சாணக்கியன் இணைக்கு முன் வைக்க விரும்புகிறேன்.

அதற்கான அனுபவமும், பட்டறிவுத் தகுதியும், விமர்சனக் கண்ணோட்டமும் எனக்கு இருக்கின்றன எனவும் நினைக் கிறேன்.

சொல்ஹெய்ம் வெறும் நோர்வேப் பிரதி நிதி மட்டுமல்லர், உலகப் பொலிஸ்கார னின் ஆளும் கூட. தந்திரசாலி ரணில் இழுத்து வருகின்ற அடுத்த துரும்பு. எச்ச ரிக்கை பண்ணி வைப்பது நமது கடமை. அதனால் கூறினேன்.

புலிகளின் காலத்தில் கொழும்பு, வன் னிப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு விளக்கம் அளிக்க என்று புதுடில்லிக்குப் போவார் சொல்ஹெய்ம்.

இப்போது மாறாக சென்னையை முடித் துக் கொண்டு கொழும்பு வருகிறார். அடுத்து வொஷிங்டனோ தெரியவில்லை. அவ தானமாக அணுகுவது அனைவருக்கும் அவசியம்.

- மின்னல் -

## யாழ்ப்பாணத்தில் காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முந்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தன் போது முடிவு செய்யப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இல. 09 காரைத்தீவு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந் துள்ள காணி, வாடிவீடுகள் அபிவிருத் திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக 30 வருட குத்தகையின் அடிப் படையில் கிராண்ட் மவுன்டன் ஹோட்டல் கம்பனிக்கு வழங்குவதற்கு முன்மொழி யப்பட்டுள்ளது.

அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இந்தியா செல்லவிருந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெரியவர்கள் 19 வயதுக்கும் 43 வயதுக்கும் இடைப்பட்ட வர்கள். குழந்தைகள் இரண்டு வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள்

இவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, சப்தேக நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட் டுள்ளது. குழந்தைகள் விடுவிக்கப்பட்டனர்.

## மாணவியைக் கெடுக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி விடுதி அமைந்துள்ள பாட சாலை அதிபர் மாணவியை தனது காரியா லயத்திற்கு வரவழைத்து அந்த மாணவி மீது பாலியால் சேட்டை விட முயற்சித்துள் ளதையடுத்து அங்கிருந்து மாணவி தப்பி ஓடியுள்ளார். இந்த சம்பவத்தை அறிந்த 4 பேர் கொண்ட குழுவினர் கடந்த மாதம் 4 ஆம் திகதி பாடசாலைக்குள் சென்று தாம் சி.ஐ.டி. என தெரிவித்து அதிபரை தாக்கியமையுடன் அவரைத் தாக்கிய போது வீடியோ எடுத்துள்ளனர்.

இந்த அதிபர் மீது தாக்குதல் நடாத் திய வீடியோ வெளியாகியதையடுத்து இதனை அறிந்த பாதிக்கப்பட்ட மாணவி சம்பவதினமான நேற்று முந்தினம் திங் கட்கிழமை மாலை 6 மணிக்கு மட்டு பொலிஸ் நிலையத்தில் அதிபருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவியை பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்தமையு டன் அதிபரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து கைது செய்துள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக நேற்றிரவு பொலிஸார் தெரிவித்தனர்.





மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
» Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
» Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
» AutoCAD 2D & 3D Modeling
» Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**



V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

Search Facebook
V2 Travels and Tours

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

**0768226244**
**0768226240**

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதியாக நடந்ததா நோர்வே?

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரி மீண்டும் வந்திருக்கிறார் முன்னாள் நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம்.

அவர் சுற்றுச்சூழல் பேணும் சர்வதேச செயற்பாட்டின் உலகளாவிய பங்காளி – ஆலோசகர் – என்ற பெயரில் இப்போது இலங்கை வந்திருந்தாலும்–

அந்த விவகாரத்துக்கு தமிழக முதல்வர் ஸ்டாலினதும், இலங்கை ஜனாதிபதி ரணிலினதும் ஆலோசகராக அவர் விளங்கினாலும் –

அவரது வருகைக்கும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளுக்கும் அதிகம் தொடர்புகள் இருப்பதாகப் பேசப்படுகின்றது. அது ஓரளவில் உண்மையும் கூட.

2002 – 2006 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரணில், சந்திரிகா, மஹிந்த அரசுகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடத்தப்பட்ட நேரடி சமரசப் பேச்சுகளில் நோர்வே அனுசரணைப் பணி வகித்தது. நோர்வேயின் தரப்பில் முக்கிய பங்காற்றியவர் எரிக் சொல்ஹெய்ம். நோர்வே அனுசரணை பணி என்றதும் தமிழர்களின் மனதில் வரும் முதல் பெயர் எரிக் சொல்ஹெய்ம் தான்.

பேச்சுக்காலத்தில் – சமரச முயற்சி வேளையில் – தமிழர்கள் தரப்பினால் பெரிதும் வரவேற்கப்பட்டவர் அவர். தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் பாலசிங்கம், பேச்சுக் குழுவுக்கு சில சமயங்களில் தலைவராக இருந்த தமிழ்ச்செல்வன் போன்றோரால் பெரிதும் நம்பிக்கைக்குரிய நடுநிலையாளராக அவர் மதிக்கப்பட்டார். அதே அளவுக்கு சிங்கள, பௌத்த தீவிரப் போக்கும் பேரினவாத வெறியும் கொண்ட தரப்புக்களால் அவர் நிந்திக்கப்பட்டார்.

இருபது ஆண்டுகளுக்கு முந்திய சமரச முயற்சியின் உள் சூத்திரங்களைப் புரிந்து கொள்ளாத நமது சமூகம் – தமிழினம் – 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சொல்ஹெய்ம் உட்பட்ட நோர்வேத் தரப்புக்கு அளிக்கப்பட்ட இத்தகைய வரவேற்பு மதிப்பின் பின்புலத்தில்தான் இப்போதைய அவரது வருகையையும் பார்க்கும்.

ஆனால் உண்மை நிலைவரம் வேறானது. அமைதி முயற்சிகளின் போக்கின் சீரழிவில்தான் நோர்வே பற்றிய புலிகளின் புரிதலும் பட்டறிவும் வேறு விதமாக – தலைகீழாக – அமைந்தன.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சம அந்தஸ்தை பேணியபடி இந்த சமாதான முயற்சிகளில் ஈடுபடுவர், சம அந்தஸ்தைப் பக்கம் சாராமல் பேணுவதை நோர்வே உறுதிப்படுத்தும் என்ற அடிப்படையில்தான் சமாதான பேச்சுக்கான அனுசரணையாளர்களாக நோர்வே அழைக்கப்பட்டது; சொல்ஹெய்மும் வந்தார்.

அரசுடன் சம தரப்பிலிருந்த புலிகளை அதிலிருந்து இறக்கி, சமாதான முயற்சிகளை அமெரிக்கா உட்பட்ட மேற்குலகு தனது சதி நடவடிக்கைகள் மூலம் சீரழித்தபோது, அனுசரணையாளர்கள் என்ற முறையில் அதைப் பகிரங்கமாக அம்பலப்படுத்திக் கண்டித்து, திருத்த முயற்சி எடுக்காமல், நழுவி, அசாதாரண அமைதிப்பேணி, அச்சதிப் போக்குகளுக்கு இடம் அளித்து, ஒத்தூதி, சர்வதேச சதி வேலைக்கு – வலைக்கு – நோர்வேயும் பங்காளியாயிற்று என்ற அதிருப்தி புலிகளின் தலைமைக்குக் கடைசி வரை பெரும் எரிச்சலாக – வெளிப்படுத்த முடியாத அந்தரமாக – இருந்தது உண்மை.

சமதரப்பாக இலங்கை அரசுடன் பேசிக் கொண்டிருந்த புலிகளை 'பயங்கரவாதிகளாக' பட்டியலிட்டது அமெரிக்கா. சம தரப்பில் இருந்து புலிகளைத் தரமிறக்கும் அந்த நடவடிக்கையைக் கண்டிக்கும் தனது நடுநிலைமைப் போக்கிலிருந்து தவறிய நோர்வே, அந்த அமெரிக்க நாட்டை சமரச முயற்சியின் பங்காளிகளாக – இணை தலைமை இடத்தை முன்னின்று வழங்கியது வரை, புலிகளுக்கு எதிரான பல்வேறு கபட நாச சதி வேலைகளுக்கு இடம் அளிப்பது போலவே நடந்து கொண்டது.

நோர்வே பற்றிய தமிழர் தரப்பின் – புலிகளின் – அதிருப்திகளை விவரிப்பதற்கும் விரிப்பதற்கும் இதுபோல பல பத்திகள் எழுதப்பட வேண்டி இருக்கும்.

அந்தப் பின்புலத்தில் எரிக் சொல்ஹெய்மின் இப்போதைய தலையீட்டையும் அமெரிக்கா பற்றிய எண்ண எச்சரிக்கையுடன் தான் தமிழர் தரப்பு அணுக வேண்டும்.

## பொதுமக்களின் கடிதங்கள், மின்னஞ்சல், தொலைபேசி அழைப்பு பதிலளிக்கும் செயன்முறையை வினைத்திறனுடன் முன்னெடுக்குக!

### பணிப்புரை விடுத்தார் ஜனாதிபதி ரணில்



அரச நிறுவனங்களுக்கு பொதுமக்கள் அனுப்பும் கடிதங்கள், மின்னஞ்சல் மற்றும் தொலைபெசி அழைப்புகளுக்கு பதிலளிக்கும் செயன்முறையை வினைத்திறனுடன் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் தமது வேலைகளை நிறைவு செய்து கொள்வதற்காக பாரிய சிரமங்களுக்கு மத்தியில் நேரம் மற்றும் பணத்தை செலவழித்து அரச நிறுவனங்களுக்கு வருகின்றனர்.

இதற்குப் பதிலாக, அந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு உடனடி பதிலை வழங்கும் வினைத்திறனான செயன்முறையை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் வழங்கியுள்ள ஆலோசனைப்படி, அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பது தொடர்பான விதிமுறைகள் அடங்கிய, பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான விசேடக் கடிதம், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அரச நிறுவனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் சாதாரணக் கடிதங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கவும்இதன்கீழ்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உடனடி பதில் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில், குறைந்தபட்சம் ஒரு வாரத்தினுள் இடைக்கால பதில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நான்கு வாரங்களுக்குள் இதற்கான இறுதி பதிலை அனுப்புவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று அனைத்து உத்தியோகபூர்வ கடிதங்களுக்கும் பதிலளிக்கும்போது அந்தக் கடிதத்தில் இடப்படும் கையொப்பத்திற்கு கீழ், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துடன் தொடர்புடைய பிரதானியின் நேரடி தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

அலுவலகங்களின் பொதுவான மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல்களை தினமும் பார்வையிடும் அதேவேளை, அதற்குப் பொறுப்பாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவும் வேண்டும்.

அதேபோன்று மேலதிகாரியின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல்களும் தினமும் பார்வையிடப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய மின்னஞ்சல்களுக்கு வரும் கடிதங்களுக்கும் உடனுக்குடன் பதில் அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு அன்றைய தினமே மின்னஞ்சல் கடிதங்களுக்கு பதில் அனுப்ப முடியாமல் போனால், குறித்த கடிதம் கிடைத்திருப்பதாகவும் அதற்கான பதிலைப் பெற்றுத் தருவதற்கு போதிய கால அவகாசத்தை வழங்குமாறும் குறிப்பிட்டு தற்காலிக பதிலொன்றை அனுப்புதல் வேண்டும். இதேபோன்று குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னதாக அதற்குரிய பதிலை வழங்க வேண்டும்.

அலுவலகத்துக்கு வரும் அனைத்து தொலைபேசி அழைப்புகளுக்கும் பதிலளிக்க வேண்டிய அதேநேரம், அதிக தொலைபேசி அழைப்புகள் வரும் நிறுவனம் ஃ பிரிவில் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதற்கென விசேட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

மேலும் அலுவலகங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் குறிப்பேடு ஒன்றும் கையாளப்பட வேண்டும். அதில் அழைப்பை மேற்கொண்டவரது பெயர், அழைப்புக்கான காரணம், மீண்டும் அவரை தொடர்பு கொள்வதற்கான இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உடனடி பதில் வழங்க முடியாத விடயங்களுக்கு அதனுடன் சம்பந்தப்பட்ட மேலதிகாரி அல்லது அந்த விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரியால் விரைவில் பதில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## 20 நாள்கள் கடலில் கச்சா எண்ணெய் கப்பல்!

### டொலர் இன்மை காரணமாம்

99 ஆயிரம் மெற்றிக் தொன் கச்சா எண்ணெய் கொண்ட கப்பல் ஒன்று 20 நாள்களாகக் கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் கடலில் நங்கூரமிட்டுள்ளது.

70 லட்சம் டொலர்கள் இல்லாத காரணத்தால் இந்த கப்பலில் இருந்து இறக்கும் பணிகள் இடம்பெறவில்லை என்பதோடு தாமதக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி நங்கூரமிட்ட ஒரு நாளுக்கு தாமதக் கட்டணமாக ஒன்றரை லட்சம் டொலர்கள் செலுத்த வேண்டும் என்றும் மொத்தமாக 110 கோடி ரூபா செலுத்த வேண்டும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

கோரல் எனர்ஜி நிறுவனத்திடம் இருந்து ஓர்செய்யப்பட்ட யூரல்கச்சாஎண்ணெய் அடங்கிய இந்தக் கப்பல் செப்ரெம்பர் 20 ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது.

அதனை விடுவிப்பது தொடர்பாக நிதியமைச்சு மற்றும் திறைசேரியுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாகவும் எரிசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இளம் தலைவர்களை உருவாக்க போகிறார் என சந்திரிக்கா தெரிவிப்பு!



கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபடாத படித்த இளம் தலைவர்களை உருவாக்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

திருகோணமலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாட்டை ஆள முடியாத அளவுக்கு தமக்கு வயதாகிவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உருவாக்கப்போகும் இளம் தலைவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

# அரசாங்கம் சூழ்ச்சிகளை மேற்கொண்டு தேர்தலை ஒத்திவைக்க முயல்கின்றது!

## கிரியெல்ல குற்றச்சாட்டு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார்.

தேர்தல் நடந்தால் அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உத்தரவாதம் இருக்காது என்பதால் பல்வேறு சூழ்ச்சிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர் எனக் குற்றம் சாட்டினார்.

தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நடத்தப்பட வேண்டும் என்ற சூழலில் தேர்தல் முறை சரியில்லை எனக் கூறி தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றளர் எனத் தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் நீதிமன்றத்தின் மூலம் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

# சமைத்த உணவுக் கழிவுகளின் அளவு 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது

மேல் மாகாணத்தில் சமைத்த உணவுக்கழிவுகளின் அளவு 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

மேல் மாகாண திண்மக்கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நலின் மான்னப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் சமைத்த உணவை வீண் விரயம் செய்வது குறைந்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார நெருக்கடியால் மக்கள் அதிகமாக உணவு தயாரிப்பில் ஈடுபடாமையும் இதற்கு காரணம் என அவர் கூறியுள்ளார்.

மேல் மாகாணத்தில் கடந்த வருடங்களில் நாளாந்தம் 300 மெற்றிக் தொன் உணவுக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது 180 மெற்றிக் தொன் உணவுக்கழிவுகளே சேகரிக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், உணவுக்கழிவுகளில் இருந்து சேதனப் பசளையை தயாரித்து வழங்க முடியும் எனவும் திண்மக்கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நலின் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

# மணியம்தோட்டம் இணைந்த கரங்கள் அமைப்பால் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள்









யாழ்ப்பாணம், ஒக்.12

மணியம்தோட்டம் இணைந்த கரங்கள் அமைப்பு 'சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை' முன்னிட்டு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் மற்றும் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய பங்கு என்பவற்றின் ஆதரவிலும் மணியம்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பு அதன் இளையோர் கழகம் என்பவற்றின் பங்களிப்போடும் இலவச மருத்துவ முகாம் நிகழ்வை அண்மையில் மணியம்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் நடத்தியது.

250 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இதில் கலந்து கொண்டு இலவசமாக நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனைகளுடன் இலவச மருத்துவ சேவை, மருந்துகள் என்பவற்றையும் பெற்று பயனடைந்தனர்.

மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஞா.அற்புதராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் விருந்தினர்களாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமாரனும் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி எஸ்.இயூயின் பிரான்ஸிஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.



# விதுர விக்ரமநாயக மற்றும் டக்ளஸ் ஆகியோர் திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு விஜயம்!



புத்த சாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரம நாயக மற்றும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நேற்று (செவ்வாய்க் கிழமை) திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தனர்.

திருகோணமலையில் பிரசித்தி பெற்ற திருகோணேஸ்வரம் ஆலயத்துக்கு விஜயம் செய்த அவர்கள், அங்கு விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டதோடு கோணேஸ்வரம் கோவிலில் தொல்பொருள் எல்லைக்கு உற்பட்ட பகுதிகள் எனக்கருதி ஆக்கிரமிக்கப் படும் காணிகள் தொடர்பாகவும் அங்கு நிறுவப்பட்டு வரும் கடைத்தொகுதிகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

கோவில் விஜயத்தின் பின்னராக ஒழுங்கு செய்யப் பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உற்பட கோவில் நிர்வாகத்தினருடன் மேற்படி விடயம் சம்பந்தமாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கோவில் தரிசனத்தைத் தொடர்ந்து வீதி ஓரப்பகுதியில் நிறுவப்பட்ட அனைத்து கடைகளையும் அங்கு இருந்து அகற்றி அதற்குப் பொருத்தமானதோர் இடத்தில் நிறுவுவதற்கும் மேலும் கோவிலுக்காக பயன்படுத்தப்படும் வீதியில் அதிக வாகனங்கள் செல்ல முடியாததன் காரணமாக வாகனத்தரிப்பிடம் ஒன்றை ஏற்படுத்து தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கடைகள் எந்தவொரு அனுமதியும் இன்றி நிறுவப்பட்டுள்ளமையுடன் அதற்காக எந்தவொரு அரச நிறுவனங்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கபடாத காரணத்தால் அவற்றை அங்கிருந்து அகற்ற முடியும் எனவும் அத்துடன் தொல்பொருள் திணைக்களத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடைகளை நிறுவ அனுமதிக்கும் பட்சத்தில் ஏனைய மாவட்டங்களிலும் அவ்வாறு கடைகளை நிறுவ அனுமதி வழங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜோன்ஸ்டன் உள்ளிட்ட மூவர் வெளிநாடு செல்வதற்குத் தடை!



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மீண்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சராக பதவி வகித்த காலத்தில் சதொச ஊழியர் குழுவை பணியிலிருந்து நீக்கி அரசியல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தியமை மூலம் அரசாங்கத்துக்கு 59 லட்சம் ரூபாவுக்கும் அதிக தொகை நட்டம் ஏற்படுத்தியதாக பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு நேற்று மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலஞ்சஊழல்ஆணைக்குழுவால்தாக்கல்செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகளில் குறித்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.டி.ஏ வின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பணிப்பாளர் மொஹமட் சாகிர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குற்றம்சாட்டப்பட்டவர்களை தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறும், அவர்களின் கைரேகைகளை எடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன், பிரதிவாதிகளான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கும் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து விசாரணையை நவம்பர் 29ஆம் திகதிக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சமாதான பேச்சாளர்கள், கருணா அம்மன், சொல்ஹெய்ம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 147

இந்தப் பதிவை எழுத தொடங்கும் போது இன்றைய (11.10.22) 'காலைக் கதிர்' காலை இதழில் ஆசிரியர் வித்தியாதரன் நோர்வேயின் முன்னைய இணக்கப் பேச்சாளர் சொல்ஹெய்ம் தற்சமயம் ஶ்ரீலங்காவுக்கு வருகை தந்தமையை பற்றியும், மதியுரைஞர் பாலசிங்கத்துடனான பகிர்வுகள் பற்றியும் சொல்ஹெய்மின் வருகையில் பல விடயங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன என்றும் குறித்திருக்கின்றார்.

"அப்போது புலிகள் – ரணில் – சந்திரிகா – மஹிந்த – புது டில்லி என்று அந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஊடாடிய சொல்ஹெய்ம், இப்போதும் அதே விடயத்துடன் சம்பந்தப்படும் அது போன்றதரப்புகளுடன்அவ்விடயங்களை ஒட்டி ஊடாட்டமும் உரையாடலும் வைத்திருக்கின்றார் என்பதை நான் அறிவேன்" என்றும் –

"நம்பிக்கை தரும் பல விடயங்கள் கட்டவிழ – புதிதாக ஆரம்பிக்கப்பட – பிள்ளையார் சுழி போடப்பட – வாய்ப்புகள் பல உண்டு. நேரத்துடன் அவற்றைப் பரிமாறுவது குழப்பத்துக்கு வழி ஏற்படுத்திவிடும்.அதனால்மௌனம்பேணுகிறேன்" – எனவும் வித்தியாதரன் பதிவிடுகிறார்.

மதியுரைஞரின் தீர்மானத்தில் ஶ்ரீலங்கா அரசோடு இணைந்து சமஷ்டித்தீர்வைஆராயலாம்எனஅறிவித்தமை அவருக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளோடும் – எல்லாவற்றுக்கும் மேல் பிரபாகரனுடனும் – பனித் திரையிட்டது என முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அவைதான் மதியுரைஞர் ஓரம் கட்டப்படுவதற்கும் பின்னால் எழுந்த தீவிரமான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கும் வழிவகுத்தது.

தாம் ஒதுங்கி இருந்த நாள்களில் தாம் முன்னர் தொடர்பில் இருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தராத ஊடகவியலாளர்களுடனும், நண்பர்களிடமும் தமது உள்ளக் குமுறல்களை அவர் சொல்லித் தீர்த்தார். சிலர் போராட்ட திசை திருப்பங்களில் அவை தந்த விளைவுகள் பற்றி எழுதினர். பலர் இவை உள்ளக விவகாரங்கள் என்றும், அவற்றில் தலையிடுவதில் என்ன பிரயோசனம் என்றும் வாளாவிருந்து விட்டார்கள்.

பாலசிங்கத்தினோடு இந்திய ஒப்பந்த முரண்பாடுகளின் தொடக்க நாள்களில் இருந்து நான் நேரடித் தொடர்புகள் வைத்துக் கொள்ளவில்லை.

அவர் மெல்போனில் தங்கியிருந்த வேளையிலும் ஏற்படுத்தப்பட்ட சந்திப்புகளை தவிர்த்து விட்டேன். எவையாகினும் கருத்துப் பரிமாறல்கள் மூன்றாம் தரப்புகள் மூலமே நடந்தன. அவர் ஒதுங்கி இருக்க வேண்டி வந்த நாள்களில் தனது மனக்குமுறல்களுக்காக தொடர்பு கொண்டாலும் நாங்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.



சமாதானப் பேச்சுகளுக்கு இடையில் சமஷ்டி இணக்கம் பற்றி பத்திரிகையாளர் வித்தியாதரனுக்கு விளக்கும் பாலாசிங்கம். பின்னால் இந்திய தொலைக்காட்சி ஊடகவியலாளர் ரவி பெர்னாட்(பின்னாளில் முதல்வர் ஜெயலலிதாவினால் இந்திய ராஜ்யசபை எம்.பியாக்கப்பட்டவர்) மற்றும் அப்போதைய ரி.ரி.என். தொலைக்காட்சி நிர்வாகி குகன்.



பாலசிங்கத்தின் லண்டன் நியூமோடன் இல்லத்தில் அவர் காலமாவதற்கு முதல் வாரத்தில் (2006 டிசெம்பர் முதல் வாரத்தில்) அவர் எடுத்துக் கொண்ட கடைசிப் படம். தாம் மிக நெருக்கமாகப் பழகிய பத்திரிகையாளர் வித்தியாதரனுடன் தோளில் கைபோட்டு அணைத்தபடி...

அவரின் கடைசி மாதங்களில் அவருடன் லண்டன் இல்லத்திலிருந்த பத்திரிகையாளர் வித்தியாதரனுடன் விடுதலை புலிகள், அதன் தலைவர், தளபதிகள், இயக்கத்தில் கட்டவிழ்ந்த விடயங்கள், பேச்சுவார்த்தைகள், தாம் செய்தவை, செய்யமுடியாமல் போனவை, திருப்திகள், அதிருப்திகள், இனி நடக்கும் எனத் தாம் எதிர்பார்க்கும் விட்டயங்கள், விபரீதங்கள் என்பன பற்றி மனம் திறந்து அவரும்மனைவிஅடேலும்பேசினார்கள் என்பதையும் அறிந்திருந்தேன். ஆனாலும் வித்தியாதரனுடன் அச்சமயத்தில் ஊடக அறிமுகம் கூட எனக்கு இருக்கவில்லை.

இப்பொழுது அவற்றின் சில மணித் துளிகள் இந்த பதிவுகள் எழுதும் போது சம்பவங்களின் கருத்தாங்கங்களின் உண்மை தன்மைக்காக அவரிடம் கேட்டு அறிந்தது உண்டு. எனக்கும் கூட அவர் (வித்தியாதரன்) அவற்றை எழுதும் காலம் இதுவல்ல என்று குறிப்பிட்டு, அத்தற்கான காரணங்களையும் சிறிது சிறிது வெளிப்படுத்துவதுண்டு. தமிழ் மக்கள் ஏற்றி வைத்த முருகனின் தேர் இருப்பிடத்திற்கு வந்து சேரும் வரையில் அந்தக் காலம் கைகூடாதோ என்னவோ...?

அதற்கு சொல்ஹெய்மின் தற்சமயத்து வரவு உந்துதல்கள் தரலாம். அதையொட்டி சிலவற்றை நானும் பின்னர் பகிர்வேன்.

மதியுரைஞருடன் எழுந்த பனித்திரை தான் விடுதலைப் புலிகளுக்குள் எழுந்த அடுத்த பேரிடர்களுக்கும் காரணமாக அமைந்தது. மூத்த தளபதியாகவும் விடுதலை புலிகளின் பல வெற்றிகளுக்கும் கிழக்கு மாகாணத்தில் மேல் அவர்களின் பிடிக்கும் காரணமாக இருந்த கருணா, தான் தொடர்ந்தே பேச்சுவார்த்தைகளின் மூலமான தீர்வையே ஆதரிக்கிறேன் எனவும், அதனை தலைவர், தளபதிகள் மட்டத்தில் அழுத்தமாகக் கூறினாலும் அவர்கள் அதற்குப் போதிய ஆதரவு தரவில்லை, அதனால் தனது மட்டக்களப்பு படையணிகள்பிரபாகரனோடுஒத்துழைக்காது போகலாம் எனப் பேச்சு வார்த்தைகளின் அனுசரணையாளர்களுக்கு கொழும்பில் 01 செப்டம்பர் 2003 சந்திப்பிலும், பின்னர் மட்டக்களப்பில் 8 செப்டம்பர் 2003 சந்திப்பிலும் தெரிவிக்க, இதைப்பற்றி விசனம் கொண்ட அனுசரையாளர்கள் விடுதலைப் புலிகளின் இடையே உள்ள உள் பூசல்களில் தாம் இடைப்புக விரும்பாவிட்டாலும், அவை பேச்சுவார்த்தைகளை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுக்கும் ஶ்ரீலங்கா அரசுக்கும் இடையில் இருக்கும் படை பலங்களின் சமநிலைகளைக் கூட, போர் திரும்பினால் பாதிக்கும் என விடுதலைப் புலிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)



யுத்தம் முடிந்து ஒரு வருடத்தின் பின்னர் பத்திரிகையாளர் வித்தியாதரனை ஒஸ்லோவில் நோர்வே வெளிவிவகார அமைச்சில் சொல்ஹெய்ம் சந்தித்தார். இந்தச் சந்திப்பு நடந்து மூன்றாம் நாள் கொழும்பில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சொல்ஹெய்முக்கும் இடையில் சந்திப்பு நடந்தது. அதற்கு முன்னோட்டமாக வடக்கு, கிழக்கின் நிலைமைகளை ஊடகவியலாளர் மூலம் நேரடியாக அறிந்து கொள்ள சொல்ஹெய்ம் ஆர்வம் காட்டினார்.

# ஐ.நாவில் உக்கிரைன் விவகாரம்: இந்திய முடிவு நேரத்துடன் வராது!

## கோடி காட்டினார் ஜெய்சங்கர்



உக்ரைனின் சில பகுதிகளை ரஷ்யா கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டதைக் கண்டிக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் வரக்கூடிய சாத்தியமான வரைவுப் பிரேரணையின் மீதான வாக்கெடுப்பில்தான் எப்படி நடந்து கொள்வது என்பதை இந்தியா முன்கூட்டியே கூற விரும்பவில்லை என்று வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் திங்களன்று தெரிவித்தார்.

விவேகம் மற்றும் கொள்கையின் அடிப்படையில், நாங்கள் எங்கள் வாக்குகளை முன்கூட்டியே வெளிப்படுத்த மாட்டோம் என்று ஜெய்சங்கர் கான்பெராவில் ஆஸ்திரேலியாவின் வெளியுறவு அமைச்சர் பென்னி வோங்குடன் ஒரு கூட்டு ஊடக சந்திப்பின் போது கூறினார்.

பொதுச் சபையில் நேற்று செவ்வாய் அல்லது இன்று புதன்கிழமை வரைவு தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் என இராஜதந்திரிகள் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தனர்.

பிரகடனப்படுத்தப்பட்ட இணைப்பைக் கண்டித்து இதே போன்று கடந்த மாத இறுதியில் அமெரிக்கா மற்றும் அல்பேனியாவால் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் முன்வைக்கப்பட்ட பிரேரணையை ரஷ்யா வீட்டோ செய்தது. சீனா, காபோன், இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் அதன் மீதான வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.




# காலிஸ்தான் வாக்கெடுப்பை நிறுத்த கனடாவுக்கு இந்தியா வலியுறுத்து!

நவம்பர் 6 அன்று ஒன்ராறியோவில் ஒரு சட்டவிரோத அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட காலிஸ்தான் வாக்கெடுப்பு என்று அழைக்கப்படும் வாக்கெடுப்பை நிறுத்துமாறு இந்தியா கடந்த வாரம் கனடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வாரம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு கனேடிய உயர் ஸ்தானிகரகத்திற்கு இந்த அரசியல் முன்னகர்வுக்கான குறிப்பை வழங்கியது. இந்திய உயர் ஸ்தானிகரகம், எதிர்காலத்தில், இந்த விவகாரம் தொடர்பாக கனேடிய வெளியுறவு அமைச்சகத்துடனும் நடவடிக்கை எடுக்கும் என்று வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கனேடிய அரசாங்கம் கடந்த மாதம் இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை மதிப்பதாகக் கூறியது.

ஆனால் செப்டம்பர் 18 அன்று ஒன்டாரியோவின் பிராம்ப்டனில் நீதிக்கான சீக்கியர் அமைப்பு அல்லது 'றீய்மூ' ஒரு வாக்கெடுப்பை ஏற்பாடு செய்தது. இந்திய – கனடிய உறவுகளில் இந்த நீதிக்கான சீக்கியர் அமைப்பு ஒரு முள்ளாகவே உள்ளது.

சமீப காலங்களில், பயண ஆலோசனை அறிவிப்புகளால் இரு நாட்டு உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. வர்த்தக ஒப்பந்தத்தை முடிப்பதற்கான முயற்சிகள் இருந்தபோதிலும், கனேடிய தரப்பிலிருக்கும் விசா தாமதங்கள், மக்களுக்கும் மக்களுக்கும் உள்ள உறவுகளில் ஒரு நிழலை ஏற்படுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

(மூலம்: 'எக்கனமிக்ஸ் ரைம்ஸ்')

# இந்திய உச்ச நீதிமன்றக் கட்டமைப்பில் தலைமை நீதிபதியாக சந்திரசூட் தேர்வு!


உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலித்துடன் நீதிபதி டி.வை. சந்திரசூட்

புதுடெல்லி,ஒக்.12

இந்திய உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக டி.வை.சந்திரசூட் பெயரை, தற்போதைய தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலித் பரிந்துரை செய்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் 49 ஆவது தலைமை நீதிபதியாக உதய் உமேஷ் லலித் கடந்த ஓகஸ்ட் மாதம் பொறுப்பேற்றார். இவரைத் தலைமை நீதிபதியாக இவருக்கு முன்பு இருந்த என்.வி.ரமணா பரிந்துரை செய்திருந்தார்.

வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதியுடன் உதய் உமேஷ் லலித்தின் பதவிக்காலம் முடிவடைகிறது. இந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியை பரிந்துரை செய்யும்படி மத்திய அரசு தற்போதைய தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலிதிற்கு கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் எழுதியிருந்தது.

பொதுவாக விதிமுறைப்படி, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக அடுத்த தலைமை நீதிபதியின் பெயரைப் பரிந்துரைக்கும்படி மத்திய அரசு கடிதம் எழுதும். பதவிக்காலம் முடிவதற்கு 28 மற்றும் 30 நாள்களுக்கு முன்பாக இதற்கு பதில் அளிக்கப்படும். மரபுபடி, பதவி மூப்பு அடிப்படையில் பதவிக்காலம் முடிவடையும் நீதிபதிக்கு அடுத்த நிலையில் இருக்கும் நீதிபதியே தலைமை நீதிபதியாக பரிந்துரைக்கப்படுவார்.

இந்த நிலையில், நவம்பர் 8 ஆம் திகதியுடன் பதவிக்காலம் முடிவடையும் தற்போதைய தலைமை நீதிபதி உதய் உமேஷ் லலித், உச்ச நீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக டி.வை.சந்திரசூட் பெயரை பரிந்துரைத்துள்ளார். இதற்கான கடிதத்தை உச்ச நீதிமன்றத்தின் மற்ற நீதிபதிகள் முன்னிலையில் நீதிபதி டி.வை. சந்திரசூட்டிடம் தலைமை நீதிபதி லலித் நேற்றுக் காலை வழங்கினார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு கூடுதல் சொலிசிடர் ஜெனரலாகப் பணியாற்றிய டி.வை. சந்திரசூட், 2013 ஆம் ஆண்டு அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார். பின்னர் 2016 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார். லலித்தைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் 50 ஆவது தலைமை நீதிபதியாக டி.வை. சந்திரசூட் பொறுப்பேற்க உள்ளார். 2024 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி வரை இவர் தலைமை நீதிபதியாக நீடிப்பார்.



# தொழில்நுட்பமும், திறமையும்தான் இந்திய வளர்ச்சியின் இரு தூண்கள்

## பிரதமர் மோடி பெருமிதம்

ஐதராபாத்,ஒக்.12

தொழில்நுட்பம், திறமை ஆகியன இந்திய வளர்ச்சிப் பயணத்தின் இரு தூண்கள் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

'இரண்டாவது ஐக்கிய நாடுகளின் உலக புவிசார் தகவல் கூட்டம் – 2022' ஐதராபாத்தில் நேற்றுத் தொடங்கியது.

'கடைசி தொலைவில் உள்ள கடைசி நபருக்கும் அதிகாரம் வழங்குதல்' என்ற தலைப்பின் கீழ் இந்த கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் காணொலிக் காட்சி மூலம் பிரதமர் மோடி பேசினார். அவர் பேசியதாவது:–

தொழில்நுட்பமும், திறமையும் இந்திய வளர்ச்சி பயணத்திற்கான இரு தூண்களாகும். வங்கிச் சேவை இல்லாத 450 மில்லியன் மக்களுக்கு வங்கிச் சேவை வழங்கப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த அமெரிக்க மக்கள் தொகையை விட அதிகம். காப்பீடு இல்லாத 135 மில்லியன் மக்களுக்கு காப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த பிரான்ஸ் மக்கள் தொகை அளவாகும். 110 மில்லியன் குடும்பங்களுக்கு சுகாதார வசதி செய்து தரப்பட்டுள்ளது. 60 மில்லியன் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. யாரும் பின் தங்கி விடக்கூடாது என்பதை இந்தியா உறுதி செய்கிறது. சிறந்த கண்டுபிடிப்பு திறனுடன் இளைஞர்களை கொண்ட நாடு இந்தியா.

தொழில் தொடங்குவதில் முதன்மையான நாடாக இந்தியா உள்ளது. 2021 ஆம் ஆண்டு முதல் தொழில் தொடங்குபவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. இது திறமையான இந்திய இளைஞர்களால் சத்தியமானது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணை



கரைச்சிப் பிரதேச சபையின் புன்னைநீராவி வட்டார உறுப்பினரான திருமதி.கலைவாணி சிறீகாந்தன் நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சி பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்று காலை 8.30மணியளவில் உறுப்பினரின் தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பெடுத்த ரி.ஐ.டியினர் 10.30 மணியளவில் வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதாக அவரது வீட்டுக்கு வருவதாகத் தகவல் தெரிவித்துள்ளனர். அதனடிப்படையில் மு.ப 10.45 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இரு ரி.ஐ.டியினர், தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியபின் அரை மணித்தியாலமாக குறித்த உறுப்பினரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். உறுப்பினரின் தனிப்பட்ட விவரங்களை சேகரித்ததோடு, அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

என்ன காரணத்துக்காக இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டதென தெரிவிக்கப்படாத போதும், கடந்த திங்கட்கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் தர்மபுரம் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப். மாலதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டதை அடிப்படையாகக் கொண்டே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என குறிப்பிடப்படுகிறது.

# வடபகுதியில் பொருளாதார போரால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கான கல்வி உதவித் திட்டம்!

## கரித்தாஸ்- செடெக் நிறுவனத்தால் வழங்கல்



வடபகுதியில் பொருளாதார நெருக்கடி, போரால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கான கல்வி உதவித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கான நிதிப்பங்களிப்பை இலங்கை கரித்தாஸ் – செடெக் நிறுவனத்தின் ஊடாக கரித்தாஸ் கொரியா நிறுவனம் வழங்கியுள்ளது.

தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் திறன்களை வளர்த்தல் தொடர்பான பயிற்சி கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 75 மாணவர்களுக்கு 8.10.2022 அன்று வழங்கப்பட்டது.

கட்டைக்காடு, மணற்காடு, புங்குடுதீவு, மண்டைதீவு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயம், வைத்தீஸ்வரக் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

கியூடெக் – கரித்தாஸ் யாழ்ப்பாண இயக்குநர் அருட்தந்தை ச. இயூஜின் பிரான்ஸிஸ் அடிகளார் இந்தப் பயிற்சி நிகழ்விற்கு தலைமைதாங்கினார். அறிமுக உரையை நிகழ்சித்திட்ட முகாமையாளர் செல்வி நித்திலா மரியாம்பிள்ளையும், கல்வி உதவி தொடர்பான விளக்கங்களை நிதி அலுவலர் செல்வி டொறின் கௌசல்யாவும் வழங்கினார்கள்.

தொடர்ந்து தலைமைத்துவ பயிற்சியை உளச்திறன் விருத்தி வளவாளர் எஸ்.அரவிந்தனும் வழங்கினார்கள்.

மேலும் இலங்கைவங்கி யாழ்.பிரதானக் கிளை முகாமையாளர் றெனோல்டும் வங்கி ஊழியர்களும் கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்திற்கு வருகைதந்து மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தார்கள்.

மாணவர்களின் இரவுநேர மின்தடை கால கற்றலுக்கான மின்விளக்குகளும் கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்தால் வழங்கிவைக்கப்பட்டன. ஒவ்வொரு மாணவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. அதில் 3 ஆயிரத்து 500 ரூபா கல்வி உதவியாகவும், மேலும் ரூபா.500.00 சேமிப்பாகவும் வங்கியில் வைப்புச்செய்யப்பட்டது.

# யாழ்ப்பாணம் தொடக்கம் .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எச்சரிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளின் சமாதான பேச்சாளர் தமிழ்ச்செல்வன் இவை பற்றி விசனம் தேவையில்லை எனவும், அவை சமாதானமாக தீர்க்கப்பட்டு விடும் எனவும் தெரிவித்து, சமாதான பேச்சுக்கள் தடைப்பட்டு இருக்கும் வேளைகளில் ஸ்ரீலங்கா அரசு பாரிய ஆயுதங்களை வேண்டிக் குவிப்பது பற்றியும், இந்தியா அவற்றுக்கு உதவுவதாகவும் தங்களது உளவுத் தகவல்கள் தெரிவிப்பதை ஒட்டிக் கூறிக் குறைபட்டார்.

சமாதான பேச்சாளர்கள் கருணா மூலம் அறிந்த தகவல்களின்படி, மதியுரைஞரின் தீர்மானத்திற்கு அனுசரணை தருவதில் தான் முன்னிருந்தார் எனவும், பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்திலேயே தரப்பட்ட உத்தரவாதங்களில் தவறாது ஒரு நாட்டிற்குள்ளான தீர்வுக்குள்ளேயே நிற்க வேண்டும் என்பதையும் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளின் மத்திய குழுவிற்கு தெரிவித்து வாதாடிய போதும் அவர்கள் இணங்காத போது தானும் ஒதுங்கி மட்டக்களப்பிலேயே அமைப்பைப் பார்ப்பதாகவும், தற்பொழுது அதனை விடுதலைப் புலிகளின் வன்னிக் கட்டுப்பாட்டில் இருந்து விலகியே நடத்திக் கொண்டு வருகிறார் என்பவற்றுடன், விடுதலைப் புலிகளிலும் மற்ற இயக்கங்களிலும் சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கிழக்குப் பகுதிகளில் இருந்து தான் சென்றார்கள், கிழக்கின் வாழ்வாதாரச் சூழ்நிலைகள் அதனைத் தூண்டின, அப்படி தனது வீரர்கள் தியாகம் செய்ய வடபகுதியில் – முக்கியமாக யாழ்ப்பாணத்தில் – பெற்றோர் தங்களது பிள்ளைகளை கெட்டித்தனமாக வெளிநாடுகளுக்குப் பத்திரமாக அனுப்புகிறார்கள் என்று பிரதேச வாதங்களையும் முன்வைத்து, தனது போராளிகள் தொடர்ந்த போராட்டத்திற்கு ஆதரவு தரவில்லை என்பதால் விடுதலைப் புலிகளின் தனித்துவமான குழுவாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும், 01, 02 ஆம் திகதி மார்ச் மாதம் 2004 நோர்வேயின் கொழும்புத் தூதரகத்துக்கும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவித்தல் தந்தார்.

நிலைமைகளுக்கு அச்சாரம் தரும் வகையில் விடுதலைப் புலிகளின் ஊடகங்கள், புலிகளின் தலைமையின் கட்டுப் பாடுகளை கருணா மீறுகிறார் எனவும், அவர் மேல் பண மோசடிகள், பாலியல் சம்பந்தப்பட்ட குற்றங்கள் எழுந்துள்ளமையால் அவற்றைப் பற்றி பேச வன்னித் தலைமைகள் அழைத்தாலும் கேட்கப்படாத காரணங்களைக் காட்டி, இவற்றை சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள அவர் முன்வரவில்லை என அறிவித்து கொண்டிருந்தன.

03 மார்ச் 2004 கருணா தான் விடுதலைப் புலிகளிடமிருந்து தனது கிழக்கு மாகாணத்தின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படைகளுடன் வெளியேறுகின்றார் என அறிவித்தார்.

நடக்கக் கூடிய தாக்கங்களைக் கணித்து, நோர்வேயின் பேச்சாளர்கள் கருணாவுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு, நிமையைத் தணிப்பதா என்ற கேள்விகளுக்கு திரும்பவும் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தமிழ்ச்செல்வன், அவை தங்களுக்குள்ளேயே சமாதானமாகத் தீர்க்கப்பட நடப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன, அவரது (கருணாவினது) செயற்பாடுகளுக்குப் பின்னணிகள் உண்டு, ஆனால் அவை இனி எடுபடுவது கஷ்டம் என்ற எண்ணப் பாங்கை பகிர்ந்தார். ஆனால் நடந்தது வேறு.

26 மார்ச் 2004 பிரபாகரன் கருணாவைக் கொல்வதற்கான படையொன்றை அனுப்பி இருந்தார். ஆயினும் தனக்குக் கிடைத்த உளவுத் தகவல்களால் இதனை தெரிந்து கொண்ட கருணா இடங்கள்மாறி, தப்பித்துக் கொண்டு, தான் விடுதலைப் புலிகளிடமிருந்து முழுவதாக வெளியேறிவிட்டேன் என அறிவிக்க, பிரபாகரன் ஒன்பது ஏப்ரல் 2004 தனது வன்னியில் இருந்த போராளிகளை வெருகலாற்றைக் கடந்து கருணாவின் தரப்புகளுடன் மோதலுக்கு அனுப்பி, அந்த சமரில் வெற்றியீட்டியதால் கருணா 12 ஏப்ரல் 2004 கொழும்புக்கு முஸ்லிம் அரசியல்வாதி ஒருவருடைய அனுசரணையில் ஜனாதிபதி சந்திரிகாவிடம் அபயம் தேடினார்.

விடுதலைப் புலிகள் தாங்கள்தான் ஏகோபித்த தலைமையில் வடக்குக் கிழக்கில் இருக்கிறோம் ஆதலால் பேச்சுவார்த்தைகளில் கருணாவிற்குப் பங்கேதும் இல்லை எனத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா கருணாவைச் சந்திக்கவில்லை. ஆனால் கருணாவையும் அங்கிருந்த அவரது போராளிகளையும் பாதுகாப்புத் தடுப்பில் வைத்து, இந்த இயக்க மோதலில் இராணுவம் தலையிட தேவையில்லை என உத்தரவிட்டார். இந்த உத்தரவுக்கு இடையிலும் கருணாவை இராணுவம் விசாரணைக்கு உட்படுத்தி, அவர் தங்களோடு இயங்குவதற்கான அனுசரணைகள் தேடினார்கள்.

போராட்ட வரலாற்றில் – சரித்திரத்தில் – விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, தமிழ் மக்கள் கூட மிக மோசமான பின்னடைவை இவற்றால் சந்தித்தார்கள். யதார்த்தத்தின் வழிகளில் ஒற்றுமையாக இயங்க விரும்பாத, அவற்றுக்கு உந்துதல் தந்தவர்களையும் பகைத்து வெளியேற நிர்பந்தங்கள் ஏற்படுத்தியமை, அன்றில், தனது நலன்களுக்காக நிலைமைகளைப் பாவித்து கருணா வெளியேறியது, எதுவானாலும் வடக்கு, கிழக்கு பிரதேச வாதங்கள் மேலெழுந்து வரவும், ஆயிரம் பேருக்கு மேலான போராளிகள் விலகியமையும், கிழக்குப் பகுதிகளின் கட்டுப்பாடு சர்ச்சைக்குள்ளானதும், போராட்ட அமைப்பு முறைகளில் உளவுத் தகவல்களின் பரிமாற்றம் என பாரிய விளைவுகளை ஏற்படுத்தி, அரசாங்கத்திற்கு எதிரான இராணுவச் சமன்பாடுகளில் பலத்த தாக்கங்களை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியது.

ஆனாலும் அந்த நாள்களிலும் ஆதரவுக்காக கருணா தமிழ்நாடு வந்தார். அதன் விவரங்களை நாளை பார்ப்போம்.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

# புதிய அரசமைப்புக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராம்!

## இப்படிக் கூறுகிறார் சாகர காரியவசம்



அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டால் நாட்டில் மீண்டும் பிரிவினை வாதம் தலைதூக்கும்.

ஆகவே, அரசமைப்பு திருத்தம் அவசியமற்றது. புதிய அரசமைப்பை உருவாக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவைவருமாறு –

அரசமைப்பு திருத்தம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எவரது தேவைக்காக அரசமைப்பு திருத்தம் செய்ய அக்கறை கொள்ளப்படுகிறது என்பதை அறிய முடியவில்லை. அரசமைப்பு திருத்தம் முத்துறைகளுடன் தொடர்புடையது. ஆகவே அரசமைப்பு திருத்தம் நாட்டுக்கு பொருந்தும் வகையில் அமைய வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள இரண்டாவது அரசமைப்பு யாப்பு இதுவரை 20 முறை சீர்திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது.

அரசமைப்பு தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாடு காணப்படுகிறது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது ஒருதரப்பினர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அமுலில் இருக்கும் வரை அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது எனக் குறிப்பிடப்பட்டது, அதற்கமைய இதுவரை காலமும் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஊடாக நாட்டின் அரசதலைவர் யார் என்ற பிரச்சினை காணப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்கப்பட்டதால், தேசிய பாதுகாப்பு அலட்சியப்படுத்தப்பட்டது, அதன் விளைவு பாரதூரமானதாக அமைந்தது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்து, நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அரசமைப்பை இயற்றுமாறு நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்தார்கள். அதற்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் அரசாங்கத்தை உருவாக்கி, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கினார்கள்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்து, 20 ஆவது திருத்தச்சட்டத்தை அறிமுகம் செய்தோம், அத்துடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதை விடுத்துதற்போது அரசமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. 19ஆவது திருத்தத்தில் நாடாளுமன்றத்துக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்கும் முரண்பாட்டை தோற்றுவித்ததை போன்று 22 ஆவது திருத்தத்திலும் இவ்விரு பிரதான துறைகளுக்குமிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க குறுகிய தரப்பினரால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 22ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டால் நாட்டில் மீண்டும் பிரிவினை வாதம் தலைதூக்கும்,

ஆகவே, அரசமைப்பு திருத்தம் அவசியமற்றது, புதிய அரசமைப்பை உருவாக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். புதிய அரசமைப்பு தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம். – என்றார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 1,287.6 வீதம் வளர்ச்சி அடைவு

## மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை

இலங்கைக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் மாத்திரம் 29 ஆயிரத்து 802 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.


இந்த விடயம் தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் மாதங்களுக்கு இடையில், 5 லட்சத்து 26 ஆயிரத்து 232 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இது 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1287.6வீத வளர்ச்சியாகும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் சுற்றுலாத் துறை மூலம் இலங்கையின் வருமானம் 946.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கோட்டாபயவின் முன்னோர்கள் சந்ததியினருக்கு நன்றி செலுத்தும் முகமாக விகாரை நிர்மாணம்!





முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னோர்கள் மற்றும் சந்ததியினருக்கு நன்றி செலுத்தும் முகமாக விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அலஹெர – மினிபுரகம கிராமத்தில் வசிக்கும் ஒருவர் பத்து லட்சம் ரூபா செலவில் இந்த புத்தர் ஆலயத்தை நிர்மாணித்து வழிபாடு செய்துள்ளார்.

அலஹெர – மினாபுர கிராமத்தைச் சேர்ந்த சந்திரசேன பண்டா (வயது – 45) என்பவரே மினாபுர கரடகொல்ல, சமனல சிகிதி முன்பள்ளியில் அண்மையில் இந்த புத்தர் ஆலயத்தை நிர்மாணித்துள்ளார்.

கூலி வேலை செய்து சம்பாதித்த பணத்தில் அவர் இந்த புத்தர் ஆலயத்தை நிர்மாணித்துள்ளார்.

பிரதேசத்தில் பல பொது இடங்களில் ஐந்து புத்தர் ஆலயங்களை நிர்மாணித்துள்ள இவர், படைப்பிரிவின் கீழ் சேவையாற்றிய இராணுவ சிப்பாய் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ராஜபக்ஷ அரசாங்கமே முழுக்காரணம்!

## ஐக்கிய தேசிய கட்சி சாடல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ராஜபக்ஷ அரசாங்கமே காரணமாகும். இவர்களின் நடவடிக்கையை அடிப்படையாகக்கொண்டே நாடுகள் எமக்கு எதிராக வாக்களித்துள்ளன. மாறாக, ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைக்கு அல்ல என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கட்சியின் தபெனிய தொகுதி அமைப்பாளர் பாரத தென்னகோன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கியநாடுகள் மனிதஉரிமைபேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பொறுப்புக் கூறவேண்டும் என ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணை, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசங்கத்தின் ஊழல் மோசடிமிக்க ஆட்சிக்கு எதிரானதாகும். இவர்களின் மோசமான நடவடிக்கையை பார்த்தே எமக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்திருந்தன.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சர்வதேச ரீதியில் சிறந்த மதிப்பு இருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த கடந்த கால அரசாங்கங்களின்போது ஜெனிவாவில் எமக்கு எதிராக இவ்வாறான பிரேரணைகள் கொண்டுவரப்படவில்லை.

அதேநேரம் கடந்த காலங்களில் எமக்கு ஆதரவாக வாக்களித்திருந்த நாடுகளும் இம்முறை வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ராஜபக்ஷவினரின் மோசமான நடவடிக்கைகளும் தீர்மானங்களுமே இதற்குக் காரணமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்குப் பொறுப்புக் கூற முடியாது.

என்றாலும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாடுகளை அரவணைத்துக்கொண்டு செயற் படுகின்றார். கடந்த வாரம் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களின்போது அவர் ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாடுகளின் நிதி அமைச்சர்களுடன் நேரடியாக கலந்துரையாடி இருந்தார். எமது நாட்டின் கடன் மறுசீரமைப்புக்கு உதவுவதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

எனவே நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகின்றார். அரசியல் வேறுபாடுகளை மறந்து அவரின் பயணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். – என்றார்.

# தொலைபேசி கட்டண உயர்வு ஆலோசனைகளைப் பெற தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஒக். 12

அண்மைக்காலமாக தொலைபேசி நிறுவனங்களால் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளமை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கட்டண அதிகரிப்பு தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவிடம் தொலைபேசி நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணத்தை உயர்த்துவதற்கு தொலைபேசி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அண்மையில் தெரிவித்திருந்தது.

2.5 வீத சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி விதிக்கப்பட்டதன் காரணமாக கடந்த 5 ஆம் திகதி முதல் மீண்டும் சேவைக் கட்டணத்தை உயர்த்த தொலைபேசி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

## ஐ.நாவுக்குக் கணக்கு காட்ட ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இதனை முழுமையாகப் புறக்கணித்து இதில் எமக்கு நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

- இப்படி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழரின் உறவினர் அமைப்பால் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் வருகையை எமது உறவுகள் தீவிரமாக எதிர்ப்பதுடன், அவர்களுடைய வருகையை முழுமையாக பகிஷ்கரிப்பதன் மூலம் இனவழிப்பு அரசின் கபட நோக்கத்தை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்த வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் குடும்பங்கள் மீது கடுமையான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திவிட்டு தாங்கள் செய்த குற்றங்களை மூடி மறைக்க இரண்டு லட்சம் ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதை நாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.

எமக்கு வேண்டும் எமது உறவுகள். நாம் கோருவது இரண்டு லட்சம் ரூபா அல்ல. கொலையாளிகளும், கடத்தல்காரர்களும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தொங்கவிடப்பட வேண்டும். அதற்குத்தான் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோருகின்றோம்.

அந்த செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை குறித்த தீர்மானம் ஐ.நாவில் இணை அனுசரணைக் குழுவால் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில், மிகவும் மோசமான தமிழினப்படுகொலை நடைபெற்றதற்கான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான சாவதேச பொறிமுறை ஒன்று அமைக்கப்படவிருக்கும் பின்னணியில், உள்நாட்டுப்பொறிமுறை மூலமாக பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் காட்டிக்கொள்வதற்கான இலங்கை அரசின் ஒரு திட்டமிட்ட கபட நாடகம் தான் இது.

கடந்தகால அரசின் ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது என இது தொடாபில் வெளியிடப்பட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு இனவழிப்பின் ஊடாக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த சிங்கள அரசு மீது 13 வருடங்கள் கடந்துள்ள நிலைமையிலும் சர்வதேச சமூகத்தால் இதுவரை அவர்களுக்கான தண்டனைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ளப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது கோரிக்கைகள் சர்வதேச சமூகத்தால் தீர்க்கப்படவில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மக்களின் சம்மதமின்றி இலங்கை அரசாலும்,சில வெளி சக்திகளாலும்,கூட்டமைப்பின் அனுசரணையுடன் கொலையாளிகளை நீதிபதிகளாக்கும் உள்நாட்டுப் பொறிமுறை கொண்டுவரப்பட்டது.

உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதிகளை வழங்கிய போதும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதனையும் கடந்த காலங்களில் அரச அதிகாரத்திலிருந்த எந்த அரசாங்கமும் முன்னெடுக்கவில்லை. இனிமேலும் அதற்கான செயற்பாடுகளை அவாகள் முன்னெடுக்கப்போவதில்லை. மாறாக இனவழிப்பு மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரை உள்ளகப்பொறிமுறையூடாக பாதுகாப்பது என்பதுதான் இலங்கை அரசின் முன்னுரிமைக்குரிய பணியாக உள்ளது.

இந்த நிலையில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் உலகில் இனப்படுகொலை, மனிதருக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க 2002இல் உருவாக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ளது. எனவே ஈழத்தமிழராகிய நாம் பரந்துபட்ட போராட்ட வெளிகளை உருவாக்கி சர்வதேச நீதி கோர அனைவரும் அணிதிரள வேண்டும். - என அதில் குறிப்பிட்டுள்ளனர்

## கோப்பாய், .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நேற்றைய தினம் நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட இருந்தார் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்னர்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காட்டுச் சந்திப் பகுதியில் 1கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் குறித்த நபர் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப்படுகின்றது.

## பெண் உட்பட 3 பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கரணவாய் பகுதியில் போதைப் பொருளுடன் நடமாடிய போதே 30 வயது பெண்ணும் 18 மற்றும் 19 வயதுடைய இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

இளைஞரில் ஒருவர் வல்வெட்டித் துறையை சேர்ந்தவர் என்றும் மற்றைய இளைஞரும் பெண்ணும் கரணவாய் - சமரபாகு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளின் பின் நாளை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## முக்கிய குற்றச்சாட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுமாறு கொழும்பு நிரந்தர டிரயல் அட்பார் நீதிமன்றம், நேற்று உத்தரவிட்டது.

பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் பிரிவாதிகளுக்கு சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டைப் பேண முடியாது என்று பிரதிவாதிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை மூவர் கொண்ட நீதிபதிகள் ஆய்ம் இரண்டுக்கு ஒன்றாகப் பிரிந்து ஏற்றுக் கொண்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏனைய குற்றச்சாட்டுகள் தொடர்பான விடயம் வரும் 16 ஆம் திகதி மன்றில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

## வலி. வடக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் வலி. வடக்கில் மீனவர்களின் நிலம் 212 ஏக்கரும், பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 612 ஏக்கரும விடுவிக்கப்படும் என நீண்ட காலமாகத் தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில் தற்போது கூண்டோடு இராணுவ மயமாக்களிற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இதேநேரம் வலி. வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ள நிலங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தொடுத்த வழக்கு உயர் நீதிமன்றில் நவம்பர் மாதம் எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் இந்நடவடிக்கைக்கு கொழும்பு காய் நகர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருக்கோணேஸ்வரத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அறிவுறுத்தல் வழங்கினார்.

திருக்கோணேஸ்வர ஆலய முன்றிலில் வியார செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களினால் ஆலயத்தின் பாரம்பரியத்திற்கும் விழுமியங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக குற்றச்சாட்டுகள் முனவைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய குறித்த இரண்டு அமைச்சர்களும் நேற்று செவ்வாய்க் கிழமை திருகோணேஸ்வர ஆலயத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன்போது, பிரதேசத்தில் வியாபார செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில், எந்தவொரு தரப்பினாலும் அதிருப்தி வெளியிடப்படாத நிலையில், குறிப்பிடத்தக்களவு காலம் வியாபார நிலையங்களை நடத்தி வருகின்றவர்களின் வாழ்வாதாரத்தினையும் கருத்தில் கொண்டு, ஆலயத்தின் புனிதத்திற்கு களங்கம் ஏற்படாத வகையில், பொருத்தமான இடங்களில் வியாபார நிலையங்களை அமைத்து வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக, திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் நிர்வாக சபையினரைக் சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து மதங்களின் விழுமியங்களும் நம்பிக்கைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போதைய அரசாங்கம் இருகின்ற நிலையில், எந்தவொரு மதத்தினதும் நம்பிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் அதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 06ஆம் பக்கத்தில்)









# 22 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நீதி அமைச்சருடன் விசேட கலந்துரையாடல்!

## வீரசுமன வீரசிங்க தெரிவிப்பு

அரசமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருடன் பேச்சில் ஈடுபட்டோம்.

இரட்டை குடியுரிமை உடையவர் அரசியலில் ஈடுபட முழுமையாகத் தடைவிதிக்கவேண்டும்என்பதில்உறுதியாக உள்ளோம் என சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பில்வினவியபோதுமேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கி, முழு நாட்டு மக்களையும் வீதிக்கிறக்கிய முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து கொண்டு அரசியல் காய் நகர்த்தலை முன்னெடுக்கிறார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுகின்றமை கவலைக்குரியது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை உடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதில் தடையேற்படுத்த வேண்டும் என்ற யோசனையை பிரதானமாக முன்வைத்தோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைத் தவிர்த்து ஏனைய அரசியல் கட்சிகளும் இந்த யோசனையை பிரதானமாக முன்னிலைப்படுத்தின.

'இரட்டை குடியுரிமையை உடையவர் இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகிக்கத் தகுதியற்றவர்' என குறிப்பிடப்பட்டு அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டது.

22 ஆம் திருத்தச் சட்டமூல வரைவு மீதான விவாதத்தை கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு ஆளும் தரப்பினர் தடையேற்படுத்தியதால் விவாதம் பிற்போடப்பட்டது.

இரட்டை குடியுரிமை உடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்தத் தகுதியற்றவர் என்ற ஏற்பாட்டை திருத்தியமைக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன



பெரமுனவின் பொதுச்செயலாளர் உட்பட ஒருசிலர் ஏழு அறிவுடையவரின் வழிகாட்டலுக்கமைய குறிப்பிட்டுள்ளதால் 22 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதில் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இரட்டை குடியுரிமை உடையவர் அரசியலில் ஈடுபட முழுமையாக தடைவிதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். – என்றார்.

# பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவார்களாம்!

## ரோஹிதவுக்கு இப்பவும் நம்பிக்கை

நாட்டின் பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். எதிர்வரும்காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில்ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனஅமோக வெற்றி பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்குறிப்பிட்டவை வருமாறு –

காலிமுகத்திடல் போராட்டத்தைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பலவீனமடைந்து விட்டது, இனி அரசியலில் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும் என பலர் அரசியல் பிரசாரங்களை முன்னெடுத்தார்கள். இடைப்பட்ட காலத்தில் அரசியல் இலாபமும் தேடிக் கொண்டார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாடு கடந்த 8 ஆம் திகதி 'ஒன்றிணைந்து எழுவோம் –களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்' என்ற தொனிப்பொருளில் களுத்துறையில் இடம்பெற்றது. பொதுஜன பெரமுனவின் இந்த எழுச்சி பிரதான அரசியல் கட்சிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி கண்டி நகரில் இடம்பெறவுள்ளது.மூன்றாவது கூட்டம் புத்தளம் நகரில் இடம்பெறவுள்ளது.நாடளாவிய ரீதியில் இனி கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

களுத்துறையில் இடம்பெற்ற கூட்டம் நகைப்புரியது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மொட்டு சின்னத்தில் போட்டியிட்டதால் தான் நாடாளு மன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். பொதுஜன பெரமுனவுக்கு புண்ணியம் கிடைக்கும் வகையில் அரசியலில் பிரவேசித்தவர்கள் தான் இன்று பொதுஜன பெரமுனவை விமர்சிக் கிறார்கள்.

நாட்டின் பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம். – என்றார்.

# மஹிந்தவை மீண்டும் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர்!

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி தவறாக வழிநடத்தியவர்கள் தற்போது மீண்டும் அவரை மேடைக்கு ஏற்றி நாட்டு மக்களைத் தவறாகவழிநடத்தமுயற்சிக்கிறார்கள்.

மே 09 ஆம் திகதிக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்திருந்தால் நாட்டின் வன்முறை தோற்றம் பெற்றிருக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மே மாதம் 09 ஆம் திகதியன்று காலை அல்லது அதற்கு முன்னர் பதவி விலகியிருந்தால் நாட்டின்வன்முறைதீவிரமடைந்துபேரழிவு ஏற்பட்டிருக்காது, அரசியலில் அவரும் கௌரவமாக இருந்திருப்பார்.

மே மாதம் 09 ஆம் திகதி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஒருசிலர் அலரி மாளிகையில் கூட்டத்தை நடத்தினர். காலி முகத்தில் போராட்டகளத்துக்குத் தாக்குதல் நடத்தும் அளவிற்கு அங்கு உத்வேகம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அலரி மாளிகையில் ஒன்று கூடியவர்கள் காலி முகத்திடல் போராட்டகளத்துக்கு தாக்குதலை நடத்தினார்கள்.

அதனால் முழு நாட்டிலும் தீ பற்றியெரிந்தது.இதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.மே 09ஆம் திகதி காலை அல்லது அதற்கு முன்னர்



அவர் பதவி விலகியிருந்தால் எந்தப் பிரச்சினையும் தோற்றம் பெற்றிருக்காது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கடந்த மே மாதம் 09ஆம் திகதி தவறாக வழிநடத்தியவர்கள் தற்போது மீண்டும் அவரை மேடைக்கு ஏற்றி நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கிறார்கள். களுத்துறையில் இருந்து அதற்கான பயணத்தை தற்போது ஆரம்பித்துள்ளார்கள்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வின் போது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்,அதன்போது அருகில் இருந்தவர் தற்போது ரணில் என குறிப்பிட்டதன் பின்னரே அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் உரையாற்றுகிறார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் ÷நாங்கள் டலஸ் அழகபெருமவிற்கு வாக்களித்தோம்,இருப்பினும் அவர் தோல்வியடைந்தார்' என குறிப்பிட்டார். ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெரிவில் பல முரண்பாடுகள் காணப்படுவதை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது. – என்றார்.

# 7 ஆயிரம் இராணுவ வீரர்களுக்கு பதவி நிலை உயர்வுகள் வழங்கல்

கொழும்பு, ஒக். 12

7பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் பரிந்துரைக்கமைய, இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இராணுவத்தின் (நிரந்தரம் மற்றும் தொண்டர் படை) 372 அதிகாரிகள் மற்றும் 7 ஆயிரத்து 127 சிப்பாய்கள் பதவி நிலைகளில் அடுத்த தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய மேஜர் ஜெனரல் தரத்துக்கு 5 பிரிகேடியர்களும் பிரிகேடியர் தரத்துக்கு 23 கேணல்களும், கேணல் தரத்துக்கு 28 லெப்டினன் கேணல்களும், லெப்டினன் கேணல் தரத்துக்கும் 35 மேஜர்களும், மேஜர் தரத்துக்கு 125 கப்டன்களும், 63 லெப்டினன்கள் கப்டன் தரத்துக்கும் மற்றும் 93 இரண்டாம் லெப்டினன்கள் லெப்டினன் பதவிக்கும் (நிரந்தர மற்றும் தொண்டர் படை) பதவி நிலையில் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

# சம்பிக்க மீதான வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டது!

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கை ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி ராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பான விசாரணை மார்ச் மாதம் 20 ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பாட்டலி ரணவக்கவிற்கு எதிராக விதிக்கப்பட்ட பயணத்தடையை நீக்கியும் நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்



கொள்ளப்பட்டபோது, வழக்கின் விசாரணையை நிறுத்தி வைத்து உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2022இல் வெளியிடப்பெற்றது.